# தமிழக விவிலியப் பணிக்குழுவின்
# ஆண்டுக் கூட்ட அமர்வின் அறிக்கை - 2023-2024

**நாள்** : **21.06.2023**

**இடம்** : **தமிழ்நாடு முப்பணி மையம், திண்டிவனம்.**

**தலைமை** : **மேமிகு பிரான்சிஸ் கலிஸ்ட்,** *தலைவர்,*
*தமிழ்நாடு முப்பணி மையம், திண்டிவனம்*
*பேராயர் புதுவை-கடலூர் உயர்மறைமாவட்டம்*

**செயலர்** : **அருள்பணி. ச. ஸ்தனிஸ்லாஸ்**
*பொதுச்செயலர்,*
*தமிழக ஆயர் பேரவையின் விவிலியப் பணிக்குழு*

**பங்கேற்றவர்கள்:**

| | |
|---|---|
| பேராயர், பொதுச்செயலர், முப்பணி மைய இயக்குநர், தமிழ்நாடு ஆயர் பேரவையின் மறைக்கல்வி, திருவழிபாடு, அன்பியப் பணிக்குழுச் செயலர்கள் மற்றும் திருவிவிலியம் திருத்தும் சிறப்புப் பணியாளர் | 07 |
| மறைமாவட்ட விவிலியப் பணிக்குழுச் செயலர் அருள்பணியாளர்கள் | 16 |
| மறைமாவட்ட விவிலியப் பணிக்குழுச் செயலர்களின் பதிலர்கள் (பிரதிநிதிகள்) | 03 |
| CCBI விவிலியப் பணிக்குழு செயலர் (பெங்களூரு) | 01 |
| துறவியர் சபைப் பிரதிநிதிகள் | 06 |
| தமிழ்நாடு முப்பணி மைய முன்னாள் பேராசிரியர்கள் | 03 |
| குருத்துவக் கல்லூரி பேராசிரியர் | 01 |
| வேதியர்கள் (ஆண் + பெண்) | 05 |
| சிறப்பு அழைப்பாளர்கள் | 04 |
| | --------- |
| மொத்தப் பங்கேற்பாளர்கள் | 46 பேர் |
| | --------- |

## 1. தொடக்க நிகழ்வுகள்

**நிகழ்ச்சி தொகுப்பாளர் :** திண்டுக்கல் மறைமாவட்ட விவிலியப் பணிக்குழுவின் செயலர் அருள்பணி. நெல்சன் அமல்ராஜ்.

### 1.2. தொடக்க இறைவேண்டல்

தூத்துக்குடி வடக்கு மண்டல விவிலியப் பணிக்குழுச் செயலர் அருள்பணி. T. ஸ்டார்வின் அவர்களது வழிநடத்துதலில் தொடக்க இறைவேண்டல் நடைபெற்றது. 1. பஜன்பாடல், 2. திருவிவிலியப் பவனி, 3. குத்து விளக்கு ஏற்றுதல், 4. இறைவார்த்தை முழக்கம், 5. இறைவேண்டல் ஆகியவை இடம் பெற்றன. முப்பணி நிலைய முன்னாள் பேராசிரியர்கள் திரு. G.A. கஸ்பார், திரு. M. முடியப்பன், திரு. தி.ம. சந்தியாகு ஆகியோர் தொடக்க இறைவேண்டல் நிகழ்வுகளை வடிவமைத்திருந்தனர்.

## 2. வரவேற்புரை

2022-2023ஆம் ஆண்டு தமிழ்நாடு விவிலியப் பணிக்குழுவின் ஆண்டுக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்த அனைவரையும் பொதுச் செயலர் அருள்பணி. S. ஸ்தனிஸ்லாஸ் வரவேற்றார். அப்போது இப்பணிக்குழுவின் தலைவர் மேதகு ஆயர் M. தேவதாஸ் அம்புரோஸ் அவர்கள் இக்கூட்டத்திற்கு வர இயலாத சூழலை எடுத்துக் கூறினார்.

## 3. தமிழ்நாடு முப்பணி மைய இயக்குநரது வாழ்த்துரை

பொன்விழா ஆண்டு தொடங்கும் இவ்வாண்டுக் கூட்டத்தில் தமிழ்நாடு முப்பணி நிலைய இயக்குநர் அருள்பணி. A. ஜான் பிரிட்டோ பாக்கியராஜ் தனது வாழ்த்துரையை நிகழ்த்தினார். அப்போது அவர், திருவெளிப்பாடு 3:20தை மேற்கோள்காட்டி இன்று தங்கள் இதயக் கதவை விவிலிய மதிப்பீடுகளுக்காக திறக்காத மக்கள் ஏராளமாய் உள்ளனர் என்றும் அப்படிப்பட்டவர்கள் விவிலியத்தின் புனிதத்தைப் புரிந்துகொண்டு ஏற்றுக் கொள்ளும் விதத்தில் விவிலியப் பணிகள் அமைய நாமெல்லாரும் கருவிகளாக இருக்க வேண்டும்" என்றும் வலியுறுத்தினார். மேலும் முப்பணி மையம் சந்தித்து வரும் நெருக்கடிகளை முக்கியமாக பொருளாதார நெருக்கடிகளைப் பற்றி அவர் உறுப்பினர்களோடு பகிர்ந்து கொண்டார்.

### 3.1. பங்கேற்பாளர்களின் அறிமுகம்

தொடர்ந்து பங்கறேப்பாளர்கள் தங்களை அறிமுகம் செய்துகொண்டனர்.

### 3.2. மறைமாவட்ட விவிலியப் பணிக்குழு

மறைமாவட்ட விவிலியப் பணிக்குழுவின் புதிய செயலர்களான F. மரிய ஜோசப் (தருமபுரி) Fr. ஜான் கென்னடி (புதுவை - கடலூர்) Fr. தாமஸ் . வெனிஷ் (மதுரை) ஆகியோரை பொதுச்செயலர் அறிமுகம் செய்து வைத்து வரவேற்றார்.

## 4. ஆண்டு அறிக்கைகள்

கடந்த 09.06.2022இல் நடைபெற்ற தமிழ்நாடு விவிலியப் பணிக்குழுவின் ஆண்டுக் கூட்ட அறிக்கையை பொதுச் செயலரின் சார்பாக TNBCLC முன்னாள் பேராசிரியர் வேதியர். தி.ம. சந்தியாகு தெளிவாக தேவைக்கேற்ப சுருக்கி வாசித்தார். அறிக்கை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதைத் தொடர்ந்து மறைமாவட்டச் செயலர்கள், துறவற சபையினர் மற்றும் தன்னார்வ பணியாளர்கள் தங்கள் பணி பற்றிய ஆண்டறிக்கையை பகிர்ந்து கொண்டார்கள்.

## 5. சிறப்புரை

தேசிய விவிலியப் பணிக்குழுவின் செயலர் அருள்பணி. யேசு கருணாநிதி விவிலியப் பணியின் பல்வேறு சிறப்பியல்புகள் பற்றிய சிறப்புரையாற்றினார்.

## 6. கலந்துரையாடல்

- மதிய உணவு இடைவேளைக்குப் பின் பிற்பகல் 2.15 மணிக்குக் கூட்டம் மீண்டும் தொடங்கியது. அதில் இடம் பெற்ற கலந்துரையாடலில் பின்வரும் கருத்துகள் முன் வைக்கப்பட்டன.
- விவிலிய நாள்காட்டிகளில் - புனிதர் விழாக்கள் / நினைவுக்குரிய வாசகங்கள் விடுபட்டுள்ளன. மேலும் ஒரு சில இடங்களில் வாசக நூலுக்குப் பதிலாக அல்லது விவிலியத்திற்குப் பதிலாக இந்த நாள்காட்டிகளே பயன்படுத்தப்படும் அவலயத்தையும் பார்க்கிறோம். எனவே அவை தடை செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது.
- குழந்தைகள் விவிலியத்தைப் புரட்டுவதை விவிலிய நாள்காட்டிகள் தடுக்கின்றன. அவர்களுக்கு விவிலியத்தில் இடம் ஞாபக சக்தி வரவேண்டும்.

- விவிலியப் பட்டயப் படிப்புகளை தொடங்கினால் சிறப்பாக இருக்கும்.
- VBSக்கு சில துறவற சபைகள் வேறு புத்தகங்களைப் பயன்படுத்துகின்றார்கள். இதை சரியாக ஆராய்ந்து தேவைப்பட்டால் தடைசெய்ய வேண்டும்.
- முப்பணி மையச் செய்திகள் முறையாக எல்லா இடங்களுக்கும் சென்று சேர்வதில்லை - (எ-டு) இன்னும் பல இடங்களில் திருமறைச் சுவடிக்குப் பதிலாக சின்னக் குறிப்பிடத்தையே பயன்படுத்துகின்றார்கள்.
- மறைவட்ட அளவிலும் பங்கு அளவிலும் விவிலியப் பணிக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.
- விவிலியப் பணிக்குழும் நற்செய்தி அறிவிப்புப் பணிக்கும் உள்ள வேறுபாடுகளைத் தெளிவுபடுத்த வேண்டும்.
- விவிலியப் பணிகள் பற்றிய ஒரு விளக்கக் கையேடு தேவை.
- இணையதள வழி விவிலியக் கல்வி - தமிழ் மொழியில் தொடங்க ஆவன செய்தல் வேண்டும்.
- நற்செய்திகளின் தொகுப்பு நூல் (The Book of Gospels) வெளியிட வேண்டும்.
- ஒவ்வொரு குடும்பமும் மாதம் ரூ. 100 வீதம் சேர்த்து விவிலியப் பணிக்கு வழங்கினால் விவிலியப் பணிக்குளுக்கு பொருளாதாரத் தடை இருக்காது.
- தமிழக விவிலியப் பணிக்குழுவின் பொதுச்செயலர் மட்டும் எல்லாப் பணிகளையும் செய்வது கடினம். எனவே அவருக்கு உதவும் வகையில் சிறு குழுக்களை அமைத்து ஒவ்வொரு பணிக்கும் ஓர் குழுவைப் பொறுப்பாக நியமிப்பது அவசியம்.
- விவிலியப் பணிகளுக்கு கால நிர்ணயம் அவசியம்.
- கலந்துரையாடல் நிறைவில் பொதுச் செயலர் அனைவருக்கும் நன்றி கூறினார்.

## 7. திருவிவிலிய திருத்தப் பணி குறித்த தெளிவு

சில ஆண்டுகளாக தமிழ்நாடு முப்பணி நிலையத்தில் தங்கி திருவிவிலியம் திருத்தும் பணியை மேற்கொள்ளும் அருள்பணி. V. இரபேல் அடிகள் அப்பணி குறித்து விளக்கம் அளித்தார். இன்னும் ஒரு மாத திருத்தும்பணி நிறைவு பெற்றுவிடும் என்று கூறினார்.

## 8. பேராயரின் ஆசியுரை

புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டப் பேராயரும் இந்நிலையத்தின் தலைவருமான பேராயர் பிரான்சிஸ் கலிஸ்ட் பிற்பகல் 3.00 மணியளவில் இக்கூட்டத்திற்கு வருகை தந்தார். விவிலியப் பணிக்குழுவின் தலைவர் இன்னும் நியமிக்கப்படாத சூழ்நிலையில் அவரே தலைவராக இருந்து ஊக்கமளித்தார். தமது ஆசியுரையில் விவிலியப் பணிக்குழு ஆற்றி வரும் மகத்தான பணிகளை பாராட்டினார். முப்பணி மையம் தயாரிக்கும் விவிலியம், மறைக்கல்வி, திருவழிபாடு சார்ந்த புத்தகங்களும் கையேடுகளும் வட இந்தியாவிலும் பெரிதும் பாராட்டைப் பெற்று இருக்கின்றன என்று பகிர்ந்து கொண்டார். நம் பணிகள் அனைத்தும் மக்களின் கிறிஸ்தவ நம்பிக்கையை இன்னும் ஆழப்படுத்தவும் வளர்க்கவும் உதவி செய்ய வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக்கொண்டார்.

## 9. ஆண்டுச் செயல் திட்டங்கள்

### 1. *விவிலிய மாதம் - விவிலிய வாரம் - விவிலிய ஞாயிறு*

இவ்வாண்டும் விவிலிய வாரம், மாதம், ஞாயிறு சிறந்த திட்டமிடுதலுடன் நடத்த முயற்சி செய்யப்படும் என்றும் மறைமாவட்ட விவிலிய வாரக் காணிக்கையில் 50% தமிழக விவிலியப் பணிகளுக்கு அனுப்பி வைக்க ஆவன செய்ய வேண்டும் என்றும் செயலர் கேட்டுக் கொண்டனர்.

### 2. கோடை விடுமுறை விவிலியப் பள்ளி : VBS 2024

இவ்வாண்டு VBS கொண்டாட்டம் - வகுப்புகள் நடத்துதல் குறித்து விரிவாகப் பேசப்பட்டது. குழு அமைத்து செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. உறுப்பினர்கள் VBS பாடல்களில் இறைவார்த்தை தாகம், விவிலிய நிகழ்வுகள் அதிகம் இடம் பெற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். VBS கையேடுகளில் வண்ணப்படங்களைத் தவிர்த்தால் விலை குறையும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. VBS நடத்தாத மறைமாவட்டங்கள் வரும் ஆண்டுகளில் நடத்தக் கேட்டுக் கொள்ளப்பட்டது. பாடல்கள் பென் டிரைவில் எங்களக்குக் கொடுக்குமுன்னரே யூடியூப்பில் வந்துவிட்டன; வரும் காலங்களில் கவனமாயிருக்க உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டனர். VBS பணிகளை மறைமாவட்டங்களுக்குக் கொடுத்து விடக்கூடாது. இதனை தமிழக விவிலியப் பணிக்குழுதான் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

### 3. கோடை விடுமுறை விவிலியப் பள்ளி மாநிலப் பயிலரங்கம்

வழக்கம் போல பிப்ரவரி வாரங்கள் - மார்ச் முன் வாரங்களில் அதற்கு வசதியாக டிசம்பருக்குள் எல்லாத் தயாரிப்புப் பணிகளும் முடித்துவிட வேண்டும் என்று உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

### 4. அஞ்சல்வழி விவிலியக் கல்வி

மண்டல வாரியாக கருத்தரங்குகள் நடத்தி இப்பணியை விரிவாகச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

### 5. முப்பணி மைய பொன்விழா சிறப்புக் கருத்தரங்குகள்

மண்டலம், மறைமாவட்டம், மறைவட்டம், பங்குகள் அளவில் மற்ற பணிக்குழுனவிருடன் இணைந்தோ விவிலியப் பணிக்குழு தனித்தோ நடத்தலாம் என்று ஆலோசனை வழங்கப்பட்டது. இது “உருவாக - உருவாக்க” என்ற மையப்பொருளில் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

### 6. விவிலியம் கற்போம் - இயக்கம் (Bible Friends)

பள்ளிகளில் / பங்குகளில் விவிலிய நண்பர் குழுக்களை உருவாக்கி ஒவ்வொரு நாளும் மாணவ மாணவியரை விவிலியத்தை வாசிக்க ஊக்கப்படுத்த வேண்டும். வாசித்த பகுதியில் உள்ள முக்கியமான வசனங்கள் / சந்தேகங்கள் / கேள்விகள் இவற்றைக் குழுவில் பகிர்ந்து கொண்டு விவிலிய அறிவை வளர்த்துக் கொள்ளலாம். ஒரு இயக்கமாக வளர்ந்தால் ஆண்டிற்கொருமுறை மறைமாவட்ட அளவில் இளைஞருக்கும் சிறாருக்கும் ஓர் விவிலிய விழாவையே ஏற்பாடு செய்யலாம்.

### 7. You Tube வழி விவிலியக் கல்வி

வெறும் சொற்பொழிவாக அல்லாமல் உரையாடல் வடிவில் ஒவ்வொரு விவிலியப் புத்தகத்திற்கும் உரிய விளக்கத்தை கொடுக்கலாம்.

### 8. மறைமாவட்டங்களில் விவிலிய ஆசிரியர்களுக்கான பயிற்சி

ஆண்டுக்கு 3-5 வகுப்புகள் நடத்தி மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக வருகை தந்து கற்றுக்கொண்டோருக்குச் சான்றிதழ் பயிற்சியை மீண்டும் தொடங்கலாம்.

### 9. விவிலிய ஞாயிறு உண்டியல் காணிக்கை

50% வழங்க தமிழக ஆயர் பேரவையில் பேசி நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும்.

**10. மறைமாவட்ட செயல் திட்டங்கள்**

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதங்களில் எப்போது என்ன மையப்பொருளில் கருத்தரங்கு நடத்த மையக் குழுவினர் வரவேண்டும் எனக் குறித்துத் தருதல் அவசியம்.

**11. நிறைவு நிகழ்வுகள்**

- ✦ பொதுச் செயலர் அருள்பணி. S. ஸ்தனிஸ்லாஸ் அனைவருக்கும் நன்றி கூறினார்.
- ✦ இறுதி இறைவேண்டல் செய்து மாலை 4.45 மணிக்குக் கூட்டம் நிறைவுற்றது.
- ✦ பேராயருடன் இணைந்து குழு புகைப்படம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

**அருள்பணி. S. ஸ்தனிஸ்லாஸ்**
*பொதுச்செயலர்,*
*தமிழக ஆயர் பேரவையின் விவிலியப் பணிக்குழு.*
*முப்பணி மையம், திண்டிவனம் - 604 001.*

**அறிக்கைத் தயாரிப்பு : வேதியர் பேரா. தி.ம. சந்தியாகு,** *திண்டிவனம்.*